# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 6/2019

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சதாசிவம் | மதம் | : |
| த/பெ | : பெருமாள் | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

**07.08.2024**

<u>வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு ஆங்கிலம் தெரியுமா என்றால் தெரியாது. எனது பிரமாண வாக்குமூலம் ஆங்கிலத்தில் தயார் செய்யப்பட்டுள்ளதில் அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 25 வருடங்களாக நான் அந்த சொத்தில் உள்ளேன். 10 வருடங்களுக்கு முன்பு அவர்கள் தமது சொத்து என்று பிரச்சனைக்கு வந்தார்கள். அதனால் நிலம் எனக்கு சொந்தமானது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 30 வருடமாகிறது.

2. என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 11 பேர் ஆவோம். எங்கள் ஊரில் புதிய காலனி, பழைய காலனி உள்ளது என்றால் சரிதான். என் அப்பா இருந்ததும் எங்கள் பழைய வீடு இருந்ததும் பழைய காலனி என்றால் சரிதான். வழக்கு சொத்து புதிய காலனியில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தை யாரிடமிருந்து வாங்கினேன் என்றால் அது எனக்கே கொடுத்த சொத்தாகும். எந்த வருடம் எனக்கு கொடுத்தார்கள் என்றால் 25 வருடத்திற்கு முன்பு கொடுத்தார்கள். எனக்கு கவனமில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் 2007 ல் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

3. 2007 க்கு முன்பே நான் தாவா சொத்தில்தான் குடியிருந்தேனா என்றால் ஆமாம். 2007 க்கு முன்பே நான் தாவா சொத்தில்தான் குடியிருந்தேன் என்பதை காட்ட

ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு 2007 க்கு முந்தைய வீட்டு வரி ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் 2007 க்கு முன்பு வீட்டு வரி ரசீது போடவில்லை. தற்போதுதான் எங்கள் ஊர் பஞ்சாயத்து தலைவர் ரசீது போட்டார். உண்மையிலேயே 2007 க்கு முன்பே நான் தாவா சொத்தில் குடியிருந்திருந்தால் வீட்டு வரி ரசீதுகள் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் நான் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்றாலும் சரியல்ல.

4. புதிய காலணியில் மொத்தம் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 47 வீடுகள் உள்ளது. 47 பேருக்கும் 2007 ல்தான் பட்டா கொடுத்தார்கள் என்றால் சரிதான். பட்டா எங்கு கொடுத்தார்கள் என்றால் தாலூகா அலுவலகத்தில் வைத்து கொடுத்தார்கள். புதிய காலணியில் குப்பன் என்பவரிடமிருந்து நான் ஒரு வீடு வாங்கினேன் என்றால் இல்லை. என் வீட்டின் புல எண், நான்கு எல்லை சொல்ல முடியுமா என்றால் எனக்கு தெரியவில்லை. புல எண்.26 ஆகும். மேற்கு தங்கவேல், கிழக்கே தெரு, வடக்கே V. P. ராஜ், தெற்கே கஜேந்திரன் உள்ளனர். என்னுடைய பிராதில் நான்கு எல்லைகள் பெயர் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

5. வழக்கு சொத்தின் அளவு சொல்ல முடியுமா என்றால் 3 செண்ட் ஆகும். கிழமேல் 22 அடி, தென்வடல் 26 அடியாகும். வழக்கு சொத்தில் ஒரு குடிசை வீடு போட்டுள்ளார் என்றால் சரிதான். தற்போது அந்த குடிசை வீடு இல்லை. 2009 ல் என் வீடு எரிந்ததாக புகார் கொடுத்ததில் புல எண்ணையோ, புதிய காலணி என்பதையோ வா.சா.ஆ 1 முதல் தகவல் அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)